International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்க இலக்கியத்தில் அறம் ஒரு கட்டவிழ்ப்பு முயற்சி

**மா. சந்துரு**
முனைவர்பட்ட ஆய்வாளர்

**முனைவர் சு. இரவிச்சந்திரன்**
இணைப் பேராசிரியர், ஆய்வு நெறியாளர்
தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியம் என்று அழைக்கப்படும் பாட்டும் தொகையில் சித்தரிக்கப்படும் 'அறம்' என்னும் விழுமியத்தை, காலங்களைக் கடந்த மாறாத தார்மீக உண்மையாகக் கொள்ளாமல், குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் நிலவுடைமைச் சமூக அதிகார அமைப்பால் கட்டமைக்கப்பட்ட ஒரு சொல்லாடலாக இக்கட்டுரை அணுகுகிறது. சங்கம் மருவிய காலத்தில் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் அற இலக்கியத்தில் ராஜ் கௌதமனின் 'அறம் அதிகாரம்' என்னும் கோட்பாட்டுப் பார்வையின் தொடர்ச்சியாக, சங்க கால அறக் கருத்தாக்கம் எங்ஙனம் அதிகாரத்தைத் தக்கவைக்கும் கருத்தியல் கருவியாகச் செயல்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கிறது.

புறப்பாடல்களில் அரசனின் கொடை மற்றும் நட்பு எவ்வாறு அவனது வரியையும் உழைப்புச் சுரண்டலையும் மறைக்கும் கருவியாக இயங்கியது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. மேலும், அகப் பாடல்களில் (நற்றிணை, அகநானூறு, கலித்தொகை) போற்றப்படும் 'நட்பு' மற்றும் 'செய்ந்நன்றி' ஆகிய உன்னத மதிப்புகள், உண்மையில் பரஸ்பர கொடுக்கல் - வாங்கல் சார்ந்த, ஒருவரை மற்றவருக்குக் கடன்படுத்திக் கட்டுப்படுத்தும் மறைமுக அதிகாரப் பரிவர்த்தனையே என்பதைச் சான்றுகளுடன் நிறுவுகிறது. இறுதிப்பகுப்பாய்வில், தமிழ்ச் சூழலில் உன்னதமாக்கப்பட்ட அறங்கள் யாவும் மேலோர் - கீழோர் படிநிலை அமைப்பைப் பாதுகாக்கும் ஒடுக்குமுறைக்கான கருத்தியல் வடிவங்களே என்பதை இவ்வாய்வு வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

**முதன்மைச் சொற்கள்:** அறம், அறிவு-அதிகாரம், மேலாதிக்கம், செய்ந்நன்றி.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வுக் கட்டுரை பின்வரும் முதன்மையான ஆய்வு நோக்கங்களைக் கொண்டு விரிவாக விவாதிக்கிறது: சங்க இலக்கியங்களில் இயல்பான, கேள்விக்கு அப்பாற்பட்ட மாறாத தத்துவமாக முன்வைக்கப்படும் 'அறம்' என்னும் சொல்லாடலை, நிலவுடைமைச் சமூகத்தின் அதிகார இருப்புக்கான ஒரு வரலாற்று உருவாக்கமாகக் கண்டு அதன் உள்முரண்களைக் கட்டுடைத்துப் பார்க்க முயல்கிறது. புறப் பாடல்களில் பதிவாகியுள்ள அரசனின் கொடை (ஈகை) மற்றும் கடமைகள், அவனது போர் வழிக் கொள்ளை, உழைப்புச் சுரண்டல் ஆகிய எதார்த்தங்களை எங்ஙனம் ‘அறம்’ என்ற பெயரால் மறைக்கும் செயல்பாட்டை நிகழ்த்துகின்றன என்பதை ஆராய்கிறது. களவு, கற்பு மற்றும் திருமண ஒழுங்கமைப்புகள் வழி பெண்ணுடலின் மீதான கட்டுப்பாட்டையும் படிநிலை அமைப்பையும் 'அறம்' எவ்வாறு பாலியல் அரசியலின் கருவியாக நியாயப்படுத்துகிறது என்பதைப் பகுப்பாய்வு செய்கிறது. சங்கப் பாடல்களில் 'உயிர் போன்றது' எனப் போற்றப்படும் நட்பும், 'செய்ந்நன்றி அறிதலும்' எவ்வாறு அடிப்படையில் பிரதி உதவியை எதிர்பார்ப்பதும், பெற்றவரை வழங்கியவருக்குக் கடன்படுத்திக் கட்டுப் படுத்துவதுமான ஒரு

ராஜதந்திர மற்றும் மேலாதிக்கப் பரிவர்த்தனை வடிவமே என்பதை நிறுவுகிறது.

**முன்னுரை**

அறம் என்பது எக்காலத்திற்கும் பொருந்தக் கூடிய மாறாத 'தார்மீக உண்மை' அல்ல; மாறாக, அது ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில், நிலவுடைமைச் சமூகம் தனது இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகக் கட்டமைத்த ஒரு கருத்தியல் கருவியாகும். நீதி, அறம் போன்ற மானுட விழுமியங்கள் வெவ்வேறு காலகட்டங்களில் அதிகார அமைப்புகளால் எவ்வாறு வடிவமைக்கப் பட்டு, மறுஉற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை அறிந்துகொள்ள அவற்றைப் பொருள்கோடல் அடிப்படையில் கட்டுடைத்துப் பகுப்பாய்வது இன்றியமையாததாகிறது. இந்திய மற்றும் தமிழ்ச் சூழலில் நிலவிவரும் ஒடுக்குமுறைகளும் படிநிலை அமைப்புகளும் ஒருசில நாட்களிலோ அல்லது ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நூற்றாண்டிலோ திடீரென உருவானவை அல்ல; அவை மிக நீண்டதொரு வரலாற்றுப்போக்கில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவையாகும். எனவே, இத்தகைய சமூகப் பிரிவினைகளும் ஒடுக்கு முறைகளும் வடிவம் பெற்ற தொடக்கப் புள்ளியைக் கண்டறிவதற்கு வரலாற்றை ஓர் அகழ்வாய்வுப் பார்வையில் அணுகி ஆராய வேண்டியுள்ளது. அறம் என்பது பொருள், இன்பம், வீடு என்னும் மூன்றோடும் இணைந்து நின்றாலும், அறம் என்பது இவை அனைத்தையும் தீர்மானிக்கும் மையக் கோடாகச் செயல்படுகிறது. சங்க இலக்கியம் என்று சொல்லப்படுகிற எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்னும் தொகுப்பு களில் அறம் வெளிப்படையாகப் போதிக்கப் படவில்லை; மாறாக, அது வீரம், கொடை, காமம், போர், அரசியல் ஆகியவற்றின் விவரணைகளுக்கு இடையே மறைமுகமாக நிறுவப்படுகிறது. இந்த மறைமுகத் தன்மையே அறத்தை ஓர் இயல்பான, கேள்விக்கு அப்பாற்பட்ட மதிப்பீடாக ஆக்கி, அதன் வரலாற்றுத் தோற்றத்தை மறைத்து வைக்கிறது. "அறம் அதிகாரத்தைக் கட்டும்" (அறம் அதிகாரம், ப.7) என்கிறார் ராஜ்கௌதமன். அது சங்க இலக்கியத்தில் எவ்வாறு தொழிற்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

இக்கட்டுரையின் நோக்கம் சங்க இலக்கியத் தில் இடம்பெறும் அறக் கருத்தாக்கத்தை ஒரு இயற்கையான மதிப்பீடாக ஏற்காமல், அது எவ்வாறு ஒரு குறிப்பிட்ட சமூக-அரசியல் கட்டமைப்பினுள் உருவாக்கப்பட்ட, அதிகாரத்தால் இயக்கப்படும் சொல்லாடலாக செயல்படுகிறது என்பதைக் கட்டுடைத்துப் பார்ப்பதாகும்.[ இதற்காக மிஷெல்ஃபூக்கோ வின் அறிவு - அதிகாரக்கோட்பாடு, லூயி அல்தூசரின் கருத்தியல் அரசக் கருவிகள் பற்றிய வாதம், அந்தோனியோ கிராம்ஷியின் மேலாதிக்கக் கோட்பாடு ஆகியவற்றை ஒரு ஒப்பீட்டு வாசிப்புக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த ஆய்வு "அறத்தை மறுதலிக்கும்" செயலாக இல்லை; மாறாக, அறம் என்னும் கருத்தாக்கம் வரலாற்றில் எவ்வாறு உருவான, யாருடைய நலனைப் பாதுகாக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டது, யாரை அது வெளிக் களப்படுத்தியது என்பதை வாசிப்பதாகும். இதுவே கட்டவிழ்ப்பு எனும் முறையியலின் அடிப்படை நோக்கமாகும் - ஒரு கருத்தாக்கத் தின் உள்முரண்களையும், அது மறைக்கும் வரலாற்றையும் வெளிக்கொண்டு வரும் முயற்சியாக அமைகிறது.

**சங்க இலக்கியத்தில் அறத்தின் வடிவங்கள்**

சங்க இலக்கியத்தில் அறம் ஒரே வடிவில் தோன்றுவதில்லை. புறநானூற்றில் அறம் அரசனின் கடமையாக முன்வைக்கப்படுகிறது –குடிமக்களைப் பாதுகாத்தல், நீதி வழங்குதல், கொடை வழங்குதல் ஆகியவை அரசனின் அறமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இங்கே அறம் என்பது அரசியல் அதிகாரத்தை நியாயப்படுத்தும் ஒரு கருவியாக மாறுகிறது. அரசன் கொடுக்கும் கொடை "அறம்" எனப்படும்போது, அக் கொடையின் பின்னணியில் உள்ள உழைப்பு, வரி வசூல், போர் வழிக்கொள்ளை ஆகியவை மறைந்துவிடுகின்றன. அதாவது, அறம் என்னும் சொல் ஒரு மறைப்புச் செயல் பாட்டை நிகழ்த்துகிறது.

அகநானூறு, குறுந்தொகை போன்ற அகத்திணை நூல்களில் அறம் வேறு வடிவில் தோன்றுகிறது. காதலின் ஒழுங்கமைப்பாக. களவு, கற்பு என்னும் பகுப்புகள் வழியாக, காதல் உறவு எவ்வாறு ஒரு "அறமுறையான" திருமண ஏற்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தொடர்ந்து வலியுறுத்தப் படுகிறது. "முளிதயிர் பிசைந்த பிசிர்பாற் விரலின்..." (குறுந்–167,ப.467) எனும் பாடலில் தலைவியின் இல்லற ஒழுக்கத்தைப் புகழுகின்றாள் செவிலித்தாய். கற்பு எனும் கருத்தாக்கம் பெண்ணுடலின் மீதான கட்டுப் பாட்டை அறம் என்னும் பெயரால் நியாயப் படுத்துகிறது. இங்கே அறம் பாலியல் அரசியலின் ஒரு கருவியாக இயங்குகிறது. "பிரசம் கலந்த வெண் சுவைத் தீம்பால்" (நற்–110,ப.121) வறுமை நிலையிலும் அறம் பிழறாமல் இருக்கும் தலைவியை நற்றாய் புகழுகிறாள். இவ்வாறு, சங்க இலக்கியத்தில் அறம் ஒரே மையக் கருத்தாக இல்லாமல்,

அரசியல், பாலியல், சமூக அமைப்பு ஆகிய பல தளங்களில் வேறுபட்ட வடிவங்களில் செயல்படும் ஒரு "பரவலான அதிகார வடிவமைப்பு" ஆக இருக்கிறது.

**நட்பு**

சங்க அக இலக்கியங்களில் ஆண்கள் போற்றுகின்ற நட்பினைப் பெண்கள் தங்களின் காதலர்கள் தங்கள் மீது கொண்டுள்ள காதலின் நியாயத்தை வலியுறுத்துவதற்காக மேற்கோள் காட்டுகின் றனர். சமூகத்தில் ஆண்களுக்கு இடையே மலரும் நட்புறவு எவ்வளவு உன்னதமானது என்பதைக் காதலனுக்கு நினைவூட்டி, அதன் வாயிலாகத் தங்களுக்குள் இருக்கும் காதலை உணர்த்தித் தன்னைவிட்டு அவன் பிரிந்துசெல்லக் கூடாது என்று காதலி பேசும் போக்கில் நட்பின் பெருமை விவரிக்கப் படுகிறது.

**மாயோன் அன்ன மால் வரைக்கவாஅன்,**

**வாலியோன் அன்ன வயங்கு வெள் அருவி**

**அம் மலைகிழவோன் நம் நயந்து என்றும்**

**வருந்தினன்" என்பது ஓர் வாய்ச் சொல் தேறாய்;**

**நீயும் கண்டு, நுமரொடும் எண்ணி,**

**அறிவு அறிந்து அளவல் வேண்டும்; மறுதரற்கு**

**அரிய வாழி, தோழி! பெரியோர்**

**நாடி நட்பின் அல்லது,**

**நட்டு நாடார், தம் ஒட்டியோர் திறத்தே.**

(நற். 32)

சான்றோர்கள் ஒருவரை நன்கு மதிப்பிட்டு ஆராய்ந்த பின்னரே அவரோடு நட்பு பாராட்டுவார்களே ஒழிய, நண்பரான பிறகு அவரைப் பற்றி ஆராயமாட்டார்கள் என்கிறது நற்றிணை. மேலும், நண்பர்களாகப் பழகும் போது ஒருவர் மற்றவரைப் பற்றி அறிந்த ரகசியங்களை ('மறை'), ஏதோவொரு சூழலில் பிரிந்த பிறகு பிறரிடம் வெளிப்படுத்த மாட்டார்கள்; அவ்வாறு கூறுவது பெருமைக் குரிய செயலும் அன்று என்கிறது கலித்துகை (கலி.25, ப.361). இவ்விரு பாடல்களின் கருத்துகள் மூலம், நட்பு என்பது சான்றோர்க் குரிய அறம் என்பதும், அது ஆழமான சிந்தனைக்குப் பின்னரே உருவாக்கிக் கொள்ளப்படும் ஓர் உறவு என்பதும் தெளிவாகிறது. அதே வேளையில், அது நிரந்தரமானதொன்றல்ல, மாறாக உடைந்து பிரியக்கூடிய ஓர் ஒப்பந்த வடிவிலான உறவு என்பதும், பரஸ்பர நலன்களுக்காகவும் உயர்ந்த பரிவர்த்தனைகளுக்காகவும் ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒன்று என்பதும் புலனாகிறது. இவ்வாறு மிகுந்த யோசனைக்குப் பிறகு உருவான நட்பில் (கேண்மை) சற்றும் பிழை நேராதவாறு பாதுகாத்துக் கொள்ள வேண்டும் (நற். 315, ப. 286).

**பேணுப பேணார் பெரியோர்' என்பது**

**நாணு தக்கன்று அது காணுங்காலை;**

**உயிர் ஓரன்ன செயிர் தீர் நட்பின்**

**நினக்கு யான் மறைத்தல் யாவது? மிகப் பெரிது**

**அழிதக்கன்றால் தானே; கொண்கன், ..** [05]

**'யான் யாய் அஞ்சுவல்' எனினும், தான் எற்**

**பிரிதல் சூழான்மன்னே; இனியே**

**கானல் ஆயம் அறியினும், 'ஆனாது,**

**அலர் வந்தன்றுகொல்?' என்னும்; அதனால்,**

**'புலர்வதுகொல், அவன் நட்பு!' எனா . . .]**

**அஞ்சுவல்- தோழி!- என் நெஞ்சத்தானே!**

(நற்.72, ப.92)

இளம்போதியார் எழுதியுள்ள இப்பாடல் நட்பு "உயிர் போன்றது" என்றும் நரை முடி நெட்டையார் எழுதிய பாடல்

**அளியள் தானே யாக்கைக்கு**

**உயிர் இயைந்தன்ன நட்பின், அவ் உயிர்**

**வாழ்தல் அன்ன காதல்,** (அகம்.339, ப.399)

சாதல் அன்ன பிரிவு அரியோளே! நட்புப் பூண்டவர் நஞ்சைக் கொடுத்தாலும் அதனை மறுக்காமல் உண்ணும் பண்பே நனிநாகரிகம் என்றும் (நற்.355) புலவர்கள் தங்களின் இலக்கியநயத்தோடு போற்றிப் பாடியுள்ளனர். அக்காலத்து நட்பில் பொதிந்துள்ள அதிகாரத் தன்மையைப் புரிந்துகொள்ள அரசனுக்கு அறிவுறுத்தப்பட்ட நட்பு குறித்த பதிவுகளை நோக்க வேண்டும். அருள், அன்பு ஆகிய பண்புகளிலிருந்து விலகாதவர்களோடு மட்டுமே அரசன் உறவு கொள்ள வேண்டும் (நற்.205, ப.200). சுயமுயற்சியும் மானமும் கொண்ட, புவியைப் போன்ற பரந்த பண்புடையோருடன் நட்புப்பாராட்ட வேண்டும் (புற.190, ப.701). மாறாக, அற்பத்தனமும், களவும், பதுக்கல் குணமும் நிறைந்த எலியைப் போன்ற இழி குணமுடையோரை விட்டு அரசன் தூர விலக வேண்டும். பிறரைப் பற்றிப் புறங்கூறிப் பழிசுமத்து வோரின் சொற்களைக் காதுகொடுத்துக் கேட்கக்கூடாது (புற.9, ப.513). இதன் மூலம், அரசனின் நட்பு என்பது அவனது அரசு சார்ந்த ராஜதந்திர உறவாகவும் (Diplomacy) அதில் கையாளப்படும் ஓர் உபாயமாகவும் பேசப்பட்டிருப்பது விளங்கும். இதனாலேயே, அரசனுக்குத் தவறை இடித்துரைத்து உண்மையை உணர்த்தும் நண்பர்கள் தேவை என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது (கலி.3,

ப.332).

**ஈகை மேல் - கீழ் வரிசை**

அரசனுடைய ஈகை என்பது அவனது அதிகாரப் பரவலுக்கான அரசியல் செயல் பாடாக அமைவதைப் போலவே, அவனது நட்பும் விளங்குகிறது. நண்பர்களின் வறுமை நிலை, சுற்றத்தாரின் துயரம் மற்றும் எதிரிகளின் பெருக்கம் ஆகியவற்றை உணர்ந்து அரசன் ('தலைவன்') தனது ஆள்வினையாற்றலைச் செலுத்த வேண்டும் என்று அகநானூறு (அக.279, ப.330) குறிப்பிடுகிறது. ஆதிக்கப் பரப்பைச் சேர்ந்த ஆண்கள் நண்பர்கள், உறவினர்கள், பகைவர் கள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப் படுகின்றனர். அதிகாரச் செயல்பாடுகளில் நண்பர்களும் எதிரிகளும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றனர். மக்களின் வறுமையைப் போக்கி அவர்களை வளம் பெறச்செய்வது, அந்த மக்களை நண்பர் களாகப் பெற்றுள்ள அரசனுக்கு வலிமையைக் கூட்டும். இதன் காரணமாகவே உதவி, கைமாறு போன்ற பொருள்சார்ந்த பரிவர்த்தனைகள் மேலான அறத்தகுதியைப் பெறுகின்றன. இவையாவும் அரசன், பெரியோர் ஆகியோரை முன்னிறுத்தியே கூறப்பட்டுள்ளன. தனக்குரிய அரசுப் பதவியை இழந்த காலத்தில், அதனை மீண்டும் அடைவதற்காக நண்பர்கள் செய்த உதவியை, அரியணையைப் பெற்ற பிறகு அரசன் மறப்பது நன்றி மறந்த அறமற்றச் செயலாகும் (குறு. 225, ப.500). ஒருவரது செல்வாக்கு மிகுந்த காலத்தில் அவரோடு நட்புக் கொண்டு அவரது வளங்களை அனுபவித்துவிட்டு, அவர் வறிய நிலையை அடையும்போது அவருக்கு உதவாமல் ஒதுங்குபவர்கள் உணர்வற்றவர்கள் ஆவர் (கலி.25, ப.361). முன்பு தனக்கு ஒரு நன்மையைச் செய்தவருக்கு, பிற்காலத்தில் அவருக்குத் தேவை ஏற்படும்போது திரும்ப உதவாமல் இருப்பது பெருமைக்குரிய செயல் அன்று (கலி.34, ப.378). இவ்வாறு செய்யாதவனுடைய பாவம் அவனது சந்ததியினரையும் விடாது பின்தொடரும் (கலி.149, ப.619) என்னும் கருத்துகள் நட்பு, உதவி, அதிகாரம் ஆகியவற்றிற்கு இடையிலான நெருங்கிய தொடர்பை வெளிப் படுத்துகின்றன. உதவி மற்றும் அதற்குப் பிரதிஉதவி செய்தல் என்கிற அதிகாரப் பரிவர்த்தனையானது, நீதி சார்ந்ததொரு நடவடிக்கையாக மையப்படுத்தப்படுகிறது. எங்கு அறக் கோட்பாடுகள் குவிக்கப் படுகின்றனவோ, அங்கு அதிகாரத்தின் வெளிப்பாடு துலக்கமாகத் தெரியும். பசுவின் மடியை அறுப்பது, அந்தணர்க்குத் தீங்கு விளைவிப்பது, பெண்ணின் கருவைக் கலைப்பது போன்ற செயல்கள் பெரும் பாதகங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகைய கொடும் பாவங்களுக்குக் கூடப் பரிகாரங்கள் உண்டு; ஆனால், ஒருவன் செய்த உதவியை மறக்கும் துரோகத்திற்கு எவ்விதக் கழுவாயும் இல்லை (புற. 34, ப.58) என்று நன்றியறிதல் என்னும் நீதி மிக அழுத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தையே பிற்காலத்தில் கம்பரும், தாய், தந்தை, குரு, தெய்வப் பிறவிகள், அந்தணர், பசு, குழந்தைகள் மற்றும் பெண்கள் ஆகியோரைக் கொன்றவர்களுக்குக் கூடப் பாவவிமோசனம் உண்டு; ஆனால், செய்த உதவியை மறந்தவர்களுக்கு எவ்விதப் பரிகாரமும் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

நன்றி பாராட்டுதலும், பழிவாங்குதலும் அதிகாரம் படைத்த மனிதர்களிடம் காணப் படுகின்றன. ஒரு கொடையாளி மற்றவருக்கு உதவி செய்யும்போது, அதைப் பெற்றவர் அக்கொடையாளிக்கு நன்றிக்கடன்பட்டவராக மாறுகிறார். இவ்வாறு வள்ளல் செய்த உதவியானது, அதனைப் பெற்றுக் கொண்டவரைச் செய்ந்நன்றியுள்ளவராக மாற்றுவதே ஒருவகையில் அவரைப் பழிவாங்கும் செயலாகும். எனவே, கொடையின் வழியாக அளிக்கப்பட்ட உதவியாக இருந்தாலும் அல்லது நட்பின் நிமித்தமாக வழங்கப்பட்ட உதவியாக இருந்தாலும், அவை யாவும் அதனைப் பெற்றவரை வழங்கியவருக்குக் கடன்பட்டவ ராக்கிப் பழிவாங்குகின்றன; அதாவது, அவருக்குக் கட்டுப்பட்டவராக மாற்றுகின்றன. உன்னதமான அற ஒழுக்கங்களைப் போலத் தோற்றமளிக்கும் இத்தகைய உறவுகள் அனைத்தும், ஆழ நோக்கும்போது அடிப்படையில் பரஸ்பர கொடுக்கல் - வாங்கல் சார்ந்த உறவுகளேயாகும்.

**முடிவுரை**

தமிழ்ச் சூழலில் உன்னதமாக்கப்பட்ட அறங்கள் யாவும், வரலாற்றின் எதார்த்தத் தளத்தில் ஒடுக்குமுறைக்கான 'கருத்தியல் கருவிகளாகவே' செயல்பட்டு வந்துள்ளன. அறம் என்பது மேலோர் என்று அழைக்கப் பட்டவர்களுக்கு ஒன்றாகவும் கீழோர் என்று அழைக்கப்பட்டவர்களுக்கு வேறாகவும் செயல்பட்டுள்ளது என்பது விளங்கும்.

**உசாத்துணை**


- சுப்பிரமணியன், ச. வே., உரை. 2010. *சங்க இலக்கியம் (மூலமும் தெளிவுரையும்: எட்டுத்தொகை பத்துப்பாட்டு)*. 4 தொகுதிகள். சென்னை: மாணிக்கவாசகர் பதிப்பகம்.
- ராஜ் கௌதமன்,.2025. *அறம் அதிகாரம்*. சென்னை: நீலம் பதிப்பகம்